**Dated : 12.02.2025**

**O.S.No. 54/2018**

**PW.3 – திருமதி. ரஞ்சிதம்**

**சாட்சி நீதிமன்ற சம்மனின் பேரில் வரவழைக்கப்பட்டு, முதல் விசாரணை :–**

நான் தற்போது ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் புளியஞ்சேரியில் பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததின் அடிப்படையில், நான் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன். நீதிமன்ற சம்மனில் வாதி உமாமகேஸ்வரி பள்ளியில் சேர்ந்த தேதி சம்மந்தப்பட்ட சேர்க்கை பதிவேடு எண். 369–க்குண்டான ஆவணத்தை நீதிமன்றத்திற்கு எடுத்துவந்துள்ளேன். அந்த ஆவணத்தின் 3வது பக்கம் வா.சா.ஆ.18 ஆகும். இந்த ஆவணத்தில் 3வது பக்கத்தில் வாதியின் பெயர் உமாமகேஸ்வரி த/பெ. சுப்பிரமணியம், புளியஞ்சேரி என்பவரை பள்ளியில் சேர்த்தற்கான சேர்க்கை பதிவேடு, மேற்படி வாதி உமா மகேஸ்வரி எங்கள் பள்ளியில் 21.10.1982 தேதியில் சேர்க்கப்பட்டுள்ளார், அவர் இந்து மதத்தை சேர்ந்தவர் என்று மேற்படி ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது. அவர் எங்கள் பள்ளியில் முதலாம் வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேற்படி உமா மகேஸ்வரி பள்ளியில் சேர்க்கப்பட்டதற்கான விண்ணப்பம் எங்கள் பள்ளியில் இணைக்கப்படவில்லை. அந்த விண்ணப்பத்தை தனியாக பள்ளி நிர்வாகம் பராமரிப்பதில்லை.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

வாதி உமா மகேஸ்வரியை பள்ளியில் யார் கொண்டு வந்து சேர்த்தார்கள் என்று சொல்லப்படவில்லை. பள்ளியில் கொண்டு வந்து சேர்த்த நபரின் கையொப்பம் இந்த ஆவணத்தில் இல்லை.

**அனுமதியின் பேரில் மறு விசாரணை :–**

நீதிமன்றத்தில் என்னிடம் உள்ள ஆவணத்தில் பள்ளியில் சேர்க்கும் மாணவர்களை யார் கொண்டு வந்து சேர்த்தார்கள் என்று சொல்லப்படவில்லை.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

S KUMARAGURU — Digitally signed by S KUMARAGURU

Principal District Judge,
Krishnagiri.